**<u>சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்</u>**

9.12.2020

OS.No. 6/2016

வா.சா. ராஜு
குறுக்குவிசாரணை:

நான் கிரயம்வாங்கப்போகும் சொத்தை புரோக்கர்கள் சரவணன், கிருஷ்ணசாமி மூலமாக போய் முதன்முறையாக தாவா சொத்தை போய் பார்த்தேன். தாவா பூமிக்குள் சென்று பார்த்தேன். பூமி யாருடையது என்றும், யாருடைய அனுபோகத்தில் உள்ளது போன்ற விவரங்களை அக்கம்பக்கத்தில் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை. கிரய ஒப்பந்தம் போட்டதற்கு பின்னிட்டு தாவா பூமிக்கு நான் போகவில்லை. கிரய ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாக சசிக்குமாருககு பூமி எந்த வகையில் பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணத்தை நான் வாங்கிபார்க்கவில்லை. பிரதிவாதி ஆவணம் நீதிமன்றத்தில் இருப்பதாகவும், வாங்கி காட்டுவதாகவும் சொன்னார். தாவா சொத்து விவரங்களை கிரய ஒப்பந்தம் ஏற்பட்ட சமயத்தில் புரோக்கர்கள்தான் சொன்னார்கள். இதற்கு முன்பாக நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க வந்ததில்லை. எந்த நீதிமன்றத்திற்கும் வரவில்லை. பிரதிவாதி யாரிடமிருந்து தாவா சொத்தை கிரயம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் கையெழுத்து எனது மாதிரி தெரிகிறது, ஆனால், இனிசியல் இல்லாமல் நான் போடமாட்டேன். என் தகப்பனார் பெயர் கருப்பணகவுண்டர், எனது ஊர் கொளப்பலூர். இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.288/2001 என்ற எண்ணில் கொளப்பலூரை சேர்ந்த கருப்பணகவுண்டர் மகன் 2ம் பிரதிவாதி பழனிச்சாமிக்காக இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால்

ஞாபகம் இல்லை. அந்த சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் மேற்படி வழக்கில் கண்டுள்ள சொத்துதான் இந்த தாவா சொத்து என்றால் ஞாபகம் இல்லை. தாவா சொத்து குறித்தத விவரங்கள் குறித்து 3 தலைமுறைகளாக எனக்கு தெரியும் என்று மேற்படி வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் ஞாபகம் இல்லை. மேற்படி வழக்கில் தாவா பூமியும், எனது பூமியும் இணைப்பொழி பூமி என்று சொல்லியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி பூமி விவரங்களை மறைத்து தாவா சொத்துக்கு நான் புதிய நபர் என்று பொய்யாக கட்சிசெய்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிர்வாதி என்ன கட்சி செய்துள்ளார் என்று தெரிந்துகொண்டேன். பிரதிவாதி கிரய ஒப்பந்தத்தை நான் கலர் ஜெராக்சில் தாக்கல் செய்துள்ளதாக கட்சி செய்த விவரம் எனக்கு தெரியும். நான் பதிலுரை மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் நான் கலர் ஜெராக்ஸ் தாக்கல் செய்யவில்லை என்றும், அசல்தான் தாக்கல் செய்துள்ளேன் என்று கட்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி தன்னுடைய எதிர்வழக்குரையில் நீதிமன்றத்திலிருந்து தனக்கு சுவாதீனம் கொடுக்காதால் நான் கிரய ஒப்பந்தம் செய்துகொள்ள வாய்ப்பில்லை என்று கட்சி செய்ததை நான் தெரிந்துகொண்டேனா என்றால் அவர் சுவாதீனம் எடுத்தபிறகு கொடுப்பதாக சொன்னார். பிரதிவாதிக்கு சுவாதீனம் இல்லாத சொத்தை நான் கிரயஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரிதான். கிரய ஒப்பந்தத்தில் காலநீட்டிப்பிற்க்கான காரணம் குறித்து பிரதிவாதி தாவா சொத்திற்கான ஆவணங்களை சார்பதிவாளர் அலுவலத்திலிந்து

வாங்கித்தருவதாக சொல்லி தொகையை பெற்றுக்கொண்டாக நான் சொல்லியிருப்பது குறித்து அது என்ன ஆவணம் என்றால் அது கிரயப்பத்திரம் ஆகும். அதை யாரிடமிருந்து கிரயம் வாங்கிய கிரயப்பத்திரம் என்பது தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள கிரய ஆவணம் போலியானது அல்ல என்பதை நிரூபிக்க நடவடிக்கை எடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வாசாஆ.1 கலர் ஜெராக்ஸ் என்றால் சரியல்ல. வாசாஆ.1 2 மற்றும் 3 வது பக்கத்தில் பிரதிவாதியின் கையெழுத்து என்று காணப்படுவது ஜெராக்ஸ் எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. போர்ஜடியாக தயாரிக்கப்பட்ட வாசாஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் நான் பரிகாரம் கோரியிருப்பதால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும், என் மீது போர்ஜடி ஆவணம் தயாரித்து வழக்கு தாக்கல் செய்ததற்கு நடவடிக்கை எடுககவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.